## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 7084/2021/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **15.09.2021 பிற்பகல் 4.00 மணி** |
| **தலைமை** | - | **திரு. ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

**பொருள் எண் 1**

பார்வை:
1. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு நீதிப்பேராணை மனு எண்.21575/2007 வழக்கின் தீர்ப்புரை நாள்.17.12.2009.
2. கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்.374, நாள்.17.02.2014.
3. இதே எண்ணிட்ட இவ்வலுவலக கடிதம் நாள். 07.05.2021, 05.06.2021, 28.06.2021 மற்றும் 19.08.2021.
4. நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.454/2019ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நாள்.24.08.2021.
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9871/2021/NPD, நாள்.28.08.2021.
6. மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.10120/2021.ஊ.1, நாள்.11.09.2021.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், விளாங்குறிச்சி கிராமம், வார்டு எண்.38, சிங்காநல்லூர் அபிவிருத்தி திட்டம் எண்.27ல் அவினாசி சாலையை ஒட்டி நேஷனல் மாடல் பள்ளி எதிர்புறம் “CC” 40 அடி அகல உத்தேச திட்டச்சாலை தொடர்பாக, பார்வை 1ல் காண் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சியால் மறுசீரமைப்பு வரைபடத்திற்கான (Realignment Plan) பார்வை 2ல் காண் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு 03.04.2014ல் உத்தேசம் அனுப்பிவைக்கப்பட்டது. மாநகராட்சியின் உத்தேசம் மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் பரிந்துரையின்படி, மேற்கண்ட ‘CC’ 40 அடி அகல திட்டச்சாலை பகுதியினை மாற்றியமைக்கப்பட்டு (Realignment of Scheme road) நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ந.க.எண்.25918/2015/GR, நாள்.16.02.2021–ன் படி கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.454/2019ன் உத்தரவுகளின் அடிப்படையில் பார்வை 3ல் காண் கடிதங்களின் வழியாக, மேற்கண்ட சிங்காநல்லூர் அபிவிருத்தி திட்டம் எண்.27 ‘CC’ 40 அடி அகல திட்டச்சாலையினை மறுசீரமைப்பு வரைபடத்தின்படி அமைக்க, தனியார் நிலங்களை நிலஆர்ஜிதம் செய்து சாலை அமைக்கும் பொருட்டு நில உரிமையாளர்களுக்கான உத்தேச இழப்பீட்டு தொகை ரூ.2,29,60,116/–ஐ கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும நிதி அல்லது உட்கட்டமைப்பு நிதியிலிருந்து ஒதுக்கீடு கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பார்வை 4ல் காண் நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் உத்தரவில் அடுத்த விசாரணை நாளான 22.09.2021–க்குள் மறுசீரமைப்பு வரைபடத்தின்படி சாலை பணி துவங்கப்பட்டிருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை 5ல் காண் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில், மேற்கண்ட திட்டசாலையினை மறுசீரமைப்பு வரைபடத்தின்படி அமைக்க, தனியார் நிலங்களை நிலஆர்ஜிதம் செய்வதற்கான உத்தேச இழப்பீட்டு தொகை மற்றும் சாலை அமைப்பதற்கான மதிப்பீட்டு தொகை விபரங்கள் கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் தீர்மானத்துடன் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை 6ல் காண் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு மேற்கண்ட திட்ட சாலை நில எடுப்பிற்கு நிர்வாக அனுமதி கோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது. இம்முன்மொழிவில் மொத்த நில மதிப்பு தொகையாக ரூ.8,72,39,937/– கணக்கீடு செய்து அனுப்பப்பட்டுள்ளது.

ஆகவே, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிலஎடுப்பிற்கு நிர்வாக அனுமதி கோரி நில நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்பித்துள்ள முன்மொழிவுகளின் அடிப்படையில், நில உரிமையாளர்களுக்கான உத்தேச இழப்பீட்டு தொகை ரூ.**8,72,39,937/–** மற்றும் சாலை அமைப்பதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.**34,00,000/–** ஆக மொத்தம் ரூ.**9,06,39,937/–** தொகையினை கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழும நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து தருமாறு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களை கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.1147/2014/எம்.எச்.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 460 நாள் 15.09.2021**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

## பொருள் எண் 2

**பொருள்** பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - கோவிட் - 19 தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளுதல் - வெளிமுகமை மூலம் 3 மாத காலத்திற்கு 100 தற்காலிக செவிலியர்கள் நியமனம் செய்தது – 07.09.2021 முதல் இரண்டு மாதங்கள் காலநீட்டிப்பு வேண்டுதல் - தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் கொரோனா இரண்டாம் அலை தொற்றின் பரவல் அதிகமாக காணப்பட்டதால் அதனை கட்டுக்குள் கொண்டுவர போதுமான செவிலியர்கள் இல்லாததால் கோவிட்-19 தொற்று நோயின் அவசர அவசியம் கருதி கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் உள்ள நகர்நல மையங்களுக்கு கூடுதலாக 100 தற்காலிக செவிலியர்களை மாதம் ஒன்றுக்கு தலா ரூ.12,000,- ரூ 8 விழுக்காடு சேவைகட்டணம் ரூ 960,- சேர்த்து ரூ 12960,- வீதம் வெளிமுகமை **தி,ள். மொ்பிக்கல் கேரியா்ஸ்** மூலம் 07.06.2021 முதல் 06.09.2021 வரை மூன்று மாதங்களுக்கு பணியமா்த்திக் கொள்ள தி,ள். மொ்பிக்கல் கேரியா்ஸ் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இவர்களில் 64 செவிலியர்கள் மட்டும் தற்பொழுது மண்டலங்கள் மற்றும் நகர்நல மையங்களில் பணி புரிந்து வருகின்றனர்.

இவா்களின் ஒப்பந்த பணிக்காலம் வரும் 06.09.2021 ல் முடிவடைவதால், இவர்களது பணிக்காலத்தினை தொடருவது குறித்து மண்டல நல அலுவலர்களிடம் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதில் அனைத்து மண்டல நலஅலுவலர்களும் கோவிட்-19 தொற்று நோயின் தாக்கம் ஓரளவிற்கு கட்டுக்குள் வரப்பெற்றுள்ள போதிலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் வரும் செப்டம்பர்,அக்டோபர் 2021 மாதங்களில் மூன்றாம் அலை பரவுவதற்கு சாத்தியகூறுகள் அதிகமாக இருப்பாதாக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ள சூழ்நிலையும், தடுப்பூசி முகாம்கள் நடத்துதல், மற்றும் தினசரி காய்ச்சல் முகாம்களை நடத்துதல் போன்ற நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், வெளிமுகமை மூலம் பணியமர்த்தம் செய்யப்பட்டு பணியில் உள்ள 64 செவிலியர்களின் பணி மேற்கொண்டும் மிகவும் அவசியம் தேவை என தெரிவித்துள்ளனா்.

மேலும், கோவிட்-19 தொற்று நோயின் அவசர அவசியம் கருதி கோயம்புத்தூர் மாநகராட்சி ஐந்து மண்டலங்கள் மற்றும் நகா்நல மையங்களுக்கு மேற்படி வெளிமுகமை மூலம் பணியமர்த்தம் செய்யப்பட்டு தற்பொழுது பணியில் உள்ள 64 செவிலியர்களின் ஒப்பந்த பணிக்காலத்தினை 07.09.2021 முதல் 06.11.2021 வரை இரண்டுமாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்ய ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் வேண்டலாம் என நகர்நல அலுவலர் (பொ) அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனவே, **தி/ள். மொ்பிக்கல் கேரியா்ஸ் (பி) லிமிட்.** வெளிமுகமை மூலம் பணியமர்த்தம் செய்யப்பட்டு தற்பொழுது பணியில் உள்ள 64 செவிலியர்களின் ஒப்பந்த பணிக்காலத்தினை ஏற்கனவே உள்ள ஊதியம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு 07.09.2021 முதல் 06.11.2021 வரை இரண்டு மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்திடவும், அதற்கான மொத்த செலவினம் **ரூ.12,960 X 64 X 2 = 16,58,880/-** (சேவைகட்டணம் சேர்த்து) ஐ கோவிட்-19 தடுப்பு நிவாரண நிதியிலிருந்து,பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு . அனுமதிக்கலாம். ந.க.எண். 4399/2021/எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 461 நாள் 15.09.2021**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 3**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் **50**க்கு உட்பட்ட டாடாபாத் வீதி எண்.**3**இல் அமைந்துள்ள மாநகராட்சி அலுவலர் குடியிருப்பில் **(**க.எண்.**31, 32, 33** மற்றும் **34)** பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு **50** ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. தற்போது இக்குடியிருப்பின் முதல் தளத்தில் மேற்கூரை விரிசல் ஏற்பட்டு நீர் கசிவால் சுவர்களில் பூச்சு பழுதுபட்டு, ஜன்னல், கதவு போன்ற மர பொருள்கள் கரையானால் சேதமடைந்துள்ளது. எனவே புதிய மேற்கூரை அமைப்பதற்கு மற்றும் பழுதுபார்த்தல் பணிக்கு தொகை ரூ.**37,90,000/-**க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்: **6920/2021/**எம்.டி.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 462 நாள் 15.09.2021</u>**

அனுமதிக்கப்பட்டது

---

**பொருள் எண் 4**

**பொருள்:** சிலை – கோயம்புத்தூர் மாநகராட்சி – வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய **150**வது பிறந்த நாள் விழாவினையொட்டி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உரையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின்படி வ.உ.சி.பூங்காவில் வ.உ.சிதரம்பரனார் அவர்களுக்கு பொதுப்பணித்துறை மூலம் முழு திருவுருவச் சிலை அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து மாநகராட்சியின் தடையின்மை சான்று கோரியது – தொடர்பாக.

**பார்வை:**
1. அரசு துணைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துலை தலைமைச் செயலகம், சென்னை கடித எண்.**11998**/மாந**2(2)/2021–1.** நாள்.**13.08.2021.**
2. செயற்பொறியாளர், பொது, கட்டிட (க&ப) கோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.வப/இவஅ1/கோ.Memorial 249 M/**2021**, நாள்.**03.09.2021.**

*******

பார்வை 1ல் காண் அரசு கடிதத்தில், வ.உ.சி. பூங்காவில் வ.உ.சிதம்பரனாருக்கு சிலை அமைப்பது குறித்து திட்டம் குறித்து உரிய கருத்துரு / குறிப்புரையினை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய **150**வது பிறந்த நாள் விழாவினையொட்டி அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதனை தொடர்ந்து பார்வை **2**ல் காணும் பொதுப்பணித்துறையின் கடிதத்தில் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமான வ.உ.சி.பூங்காவில் சிலை அமைக்க ஏதுவாக 50' x 50' அளவிலான இடம் தேவைப்படுவதால் அதற்கான மாநகராட்சியின் தடையின்மை சான்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சொந்தமாக மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள வ.உ.சி. பூங்கா இடத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு முழு திருவுருவச் சிலை அமைக்க வ.உ.சி.பூங்காவின் நுழைவாயிலின் தென்வடல் சாலைக்கு மேற்குபுறமாக **50**அடி அகலம் **45**அடி நீளம் அளவிலான இடம் உகந்ததாக உள்ளது. ஆகவே, மேற்படி இடத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்களுக்கு முழு திருவுருவச் சிலை அமைக்க மாநகராட்சியின் தடையின்மை சான்று பொதுப்பணித்துறைக்கு வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.**7130/2021/**எம்.எச்.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 463 நாள் 15.09.2021</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது

---

(ஒப்பம்) ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.,
தனி அதிகாரி,
கோயம்புத்தூர் மாநகராட்சி